## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. சலேந்திரன் | அசல் வழக்கு எண். | 65/2015 |
| த/பெ. | - | பொன்னுசாமி | பி.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

03 .03.2026

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. வழக்கு சொத்துக்களின் மீது உரிமை விளம்புகை பரிகாரம் கேட்டு நானும் மற்ற பிரதிவாதிகளும் எதிர் கோரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் வாதிகளுக்கு எப்படி பாத்தியம் என்று நான் தெரிந்துகொண்டேன் என்றால் தெரிந்துகொண்டேன். வழக்கு சொத்துக்களை வாதிகள் வா.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் உரிமை கோருகின்றனர் என்றால் சரியல்ல. வாதிகள் எந்த ஆவணத்தின் அடிப்படையில் உரிமை கோருகின்றனர் என்றால் பாகம் பிரித்தாக கூறி உரிமை கோருகின்றனர். வாதிகளின் பாக பிரிவினை ஆவணமான வா.சா.ஆ.5 ஆவணத்தை செல்லாது என்று நானோ எனது தாயாரோ எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான்.

2. பி.சா.ஆ.1 ஆவணத்திற்கு முன்பு மலையன் என்பவர் வழக்கு சொத்துக்களை எவ்வாறு அனுபவித்து வந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், அப்போது நான் சின்ன குழந்தை. என் அம்மாவிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். என் அம்மாவிடம் கேட்டு தெரிந்துகொண்டதாக என்னுடைய எதிர்வழக்குரை மற்றும் பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் தாயரான ஆதிலட்சுமி என்பவருக்கு மலையன் மற்றும் வாதிகள் தான் திருமணம் செய்து வைத்தனர் என்றால் சரியல்ல, மலையன் மட்டும் தான் செய்து வைத்தார். மலையன் மட்டும் தான் திருமணம் செய்து வைத்தார் என்று என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.03.03 18:22:36 +0530

3. பி.சா.ஆ.1 ஆவணத்தில் நான் தரப்பினரோ சாட்சியோ இல்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணம் எழுதிய போது எனக்கு நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தை அனுசரித்து என் தாயரான ஆதிலட்சுமி என்பவர் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். ஆதிலட்சுமி என்பவரின் வாரிசுகளின் பெயர்களும் பட்டா மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்திற்கு பின்னிட்டு ஆதிலட்சுமி மற்றும் அவர்களது வாரிசுகளின் பெயர்களில் பட்டா மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை எடுத்தாக எந்த பொருண்மையும் பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தை மலையன் உயிருடன் இருந்தபோது வா.சா.ஆ.7 ஆவணத்தின் மூலம் ரத்து செய்துவிட்டனர் என்றால் சரியல்ல, நீதிமன்றத்திற்கு வந்த பின்பு தான் எனக்கு அந்த விவரம் தெரியும். நீதிமன்றத்திற்கு வந்த பின்பு தான் வா.சா.ஆ.7 ஆவணம் பற்றி எனக்கு தெரிய வந்ததாக என் பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. என் தாயாரான ஆதிலட்சுமி என்பவர் உயிருடன் இருந்தபோது வா.சா.ஆ.7 ஆவணத்தை பற்றி என்னிடம் சொல்லியுள்ளரா என்றால் இல்லை. என் தாயார் உயிருடன் இருந்தபோது பி.சா.ஆ.1 ஆவணம் நடைமுறையில் உள்ளதா என்று என் தாயாரிடம் நான் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. என் தாயார் ஆதிலட்சுமி என்பவர் 2012ம் ஆண்டில் இறக்கும் வரை வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.7 ஆவணங்களை ரத்து செய்வதற்கு எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரதான். பி.சா.ஆ.1 ஆவணம் எழுதிய பின்பு வா.சா.ஆ.7 ஆவணம் எழுதும் வரையிலான 3 வருட இடைவெளியின் போது வழக்கு சொத்துக்களை எனது தாயார் அனுபவித்து வந்தற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணம் எந்த காலத்திலும் நடைமுறைக்கு வராததால் தான் ஆதிலட்சுமி என்பவர் வழக்கு சொத்துக்களை அனுபவம் செய்து வரவில்லை என்றும் அனுபவம் செய்து வந்திருந்தால் 1975 முதல் 1978 காலக்கட்டத்திற்கான வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.03.03 18:22:42 +0530

5. ஆதிலட்சுமி இறந்த பின்பு வழக்கு சொத்திற்கான பட்டாவை என் பெயரில் மாற்றுவதற்கு நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.2 வரி இரசீதுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டா எண்.110 ஆனது வாதிகளின் தகப்பனாரான மலையன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ஆவணங்களில் சில இரசீதுகளில் 2சி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ஆவணங்கள் அனைத்தும் மரங்களுக்கானது என்றால் சரியல்ல. வாதிகளிடமிருந்து வழக்கு சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்பதற்கான 2சி மரத்திற்கான வரி இரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. 4ம் பிரதிவாதி எனக்கு என்ன உறமுறை என்றால் என் அண்ணன் தவமணி என்பவரின் மகன். 4ம் பிரதிவாதியும் வழக்கறிஞரை நியமித்து வழக்கு நடத்தி வருகிறார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி என்ன கட்சியாடி வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பி.சா.ஆ.1 ஆவணமானது நடைமுறைக்கு வரவில்லை என்றும் வழக்கு சொத்துக்களை ஆதிலட்சுமியின் வாரிசுகள் அனுபவம் செய்து வரவில்லை என்று 4ம் பிரதிவாதி கட்சி செய்துள்ளார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி கட்சி செய்துள்ள விவரங்கள் தவறு என்று என் பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை வாதிகள் அனுபவித்து வருவதை நிரூபணம் செய்ய வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளனர் என்றால் நாங்களும் தாக்கல் செய்துள்ளோம்.

7. என் தாயாரருக்கு எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்களை மலையன் மற்றும் வாதிகள் கூட்டு குடும்பாக அனுபவித்து வந்து மலையன் இறந்த பின்பு வா.சா.ஆ.5 ஆவணம் மூலம் பாகபிரிவினை செய்து தற்போது வரை வாதிகள் தான் அனுபவத்திலிருந்து வருகின்றனர் என்றால் சரியல்ல. மலையன் என்பவரின் குமாரர்களுடன் விரோதம் ஏற்பட்ட காரணமாக சூதுமார்க்கமாக பி.சா.ஆ.1 ஆவணத்தை ஆதிலட்சுமி என்பவர் எழுதி வாங்கிக்கொண்டார் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணமானது வா.சா.ஆ.7 ஆவணத்தின் மூலம் ஆதிலட்சுமி உயிருடன் இருந்தபோதே ரத்து

PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.03.03 18:22:48 +0530

செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணம் எந்த காலத்திலும் நடைமுறைக்கு வரவில்லை என்றும் எந்த காலத்திலும் ஆதிலட்சுமியோ அவரது வாரிசுகளோ வழக்கு சொத்துக்களை அனுபவித்தது கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை மலையன் என்பவர் அனுபவித்து வந்து அவர் இறந்த பின்பு அவரது வாரிசுகளான வாதிகள் பாகம் பிரித்து கொண்டு தற்போது வரை அனுபவம் செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல. என் தாயாருக்கு 1970 ல் திருமணம் ஆகியுள்ளதால் அவருக்கு முன்பு பாகம் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. வாதிகள் கோரியவாறு வழக்கு அனுமதிக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி முடித்து வைக்கப்படுகிறது.

**( 4 ம் பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார் )**

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.03.03 18:22:52 +0530

District Munsif
Vanur.